**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF THIRU. S. CHINNANNA ROUGH STONE QUARRY LEASE OVER AN EXTENT OF 2.80.0 HA LOCATED AT SF.NO.136(PART-1), VENKATESAPURAM VILLAGE, SHOOLAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT ON 10.10.2024 AT 11.00 AM M/S. P.V.R – L.M.R KALYANA MANTAPAM, NO. 344/1, 344/2, BERIKAI VILLAGE, THEERTHAM ROAD, SHOOLAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Tmt.R.A.Priyanka I.A.S | : | Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. M. Selvakumar | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 3 | Er. A. Jothi Prakash | : | Assistant Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 4 | Thiru. S. Chinnanna | : | The Proponent, Thiru. S. Chinnanna Rough Stone Quarry |
| 5 | Thiru.P.Gopinath | : | EIA Consultant, M/s. Ecotech Labs Pvt Ltd, Chennai |
| | Public | : | 52 Nos. (Attendance enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the public and project proponent who have attended the public hearing for the proposed Thiru. S. Chinnanna Rough Stone Quarry, SF.No.136(Part-1), lease over an extent of 2.80.0 Ha, Venkatesapuram Village, Shoolagiri Taluk, Krishnagiri District is required to get

Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority - Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as, "Dinamalar" and "The New Indian Express" dated 05.09.2024 and bit notices regarding public hearing was distributed to the public of Venkatesapuram Village, Kutalapalli Village and Menasanadoddi Village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the Sub Collector, Hosur has requested the project proponent to explain about their proposed rough stone quarry project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, on behalf of the proposed Thiru. S. Chinnanna Rough Stone Quarry, Thiru.P.Gopinath, EIA Consultant, M/s. Ecotech Labs Pvt Ltd of the proposed rough stone quarry project has made presentation about the proposed rough stone quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed rough stone quarry project. The views and suggestions of the public are detailed below:

1. **Thiru. Navin, Venkatesapuram Village:**

Thiru. Navin said that there will be no harm to our village due to the operation of the proposed quarry. Further, requested the quarry management to reduce the truck's speed while crossing the village and also to operate the quarry without any dust emanation which causes air pollution, added to cover the loaded trucks properly to avoid dust emanation and to provide employment to the local youth in the proposed quarry.

2. **Thiru. Srinivas, Venkatesapuram Village:**

Thiru. Srinivas has requested to operate the quarry trucks with optimal speed limit to avoid nuisance to the public, to plant the tree saplings adjacent to the quarry roads and to maintain them properly and to sprinkle the water on the haul roads in frequent intervals to avoid dust emanation.

3. **Thiru. Dharsan, Venkatesapuram Village:**

Thiru. Dharsan has requested to operate the quarry trucks with optimal speed limit to avoid nuisance to the public, to cover the loaded trucks properly and to sprinkle the water on the haul roads in frequent intervals to avoid dust emanation.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority -Tamilnadu.

Further, one petition was received on the proposed Thiru. S. Chinnanna Rough Stone Quarry project during the public hearing meeting. The petition is enclosed herewith.

Further, it is informed that there is no written representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed Rough Stone Quarry project.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

17/10/2024

**District Environmental Engineer**
**Tamilnadu Pollution Control Board**
**Hosur**

A. Jothi
17/10/24

**Sub Collector**
**Hosur**

1/7

**District Collector**
**Krishnagiri**

1/7

-03

**திரு. சீ. சின்னண்ணா ரப் ஸ்டோன் குவாரி, சர்வே. எண்.136(பகுதி-I), வெங்கடேசபுரம் கிராமம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட ரப் ஸ்டோன் குவாரி 2.80.0 ஹெக்டர் பரப்பளவில் நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 10.10.2024 அன்று எண். 344/1, 344/2, பேரிகை கிராமம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள தி/ள். பிவிஆர் & எல்எம்ஆர் கல்யாண மண்டபம், முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி.R.A. பிரியங்கா I.A.S | : | சார் ஆட்சியர், ஓசூர் (மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er. மு. செல்வகுமார் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர். |
| 3 | Er.A. ஜோதி பிரகாஷ் | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர். |
| 4 | திரு. சீ. சின்னண்ணா | : | உரிமையாளர் திரு. சீ. சின்னண்ணா ரப் ஸ்டோன் குவாரி |
| 5 | திரு. P. கோபிநாத் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் தி/ள்.ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. |
| | பொதுமக்கள் | : | 52 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

திரு. சீ. சின்னண்ணா ரப் ஸ்டோன் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த சார் ஆட்சியர், ஓசூர், பொதுமக்கள் மற்றும் திரு. சீ. சின்னண்ணா ரப் ஸ்டோன்

குவாரியின் உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினமலர்" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 05.09.2024 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், வெங்கடேசபுரம் கிராமம், குட்டலப்பள்ளி கிராமம், மெனசனதொட்டி கிராமம் ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரியின் உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும், இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் – தமிழ்நாடு–க்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர், ஓசூர், அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் திரு. சீ. சின்னண்ணா ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் உரிமையாளர்களை உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

திரு. சீ. சின்னண்ணா ரப் ஸ்டோன் குவாரி நிறுவனத்தின் சார்பாக, திரு.P.கோபிநாத், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர், தி/ள்.ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

**1. திரு. நவீன், வெங்கடேசபுரம் கிராமம்:**

திரு. நவீன் அவர்கள், இக்குவாரி திட்டம் அமைவதால் எங்களுக்கு பிரச்சனை இல்லை. குவாரியின் வாகனங்கள் சாலையில் செல்லும் போது வேகத்தை குறைத்து இயக்குமாறும் குவாரியிலிருந்து தூசுக்கள் வெளியேறாமல் குவாரியை இயக்குமாறு குவாரி நிர்வாகத்தினரிடம் கேட்டுக்கொண்டார். மேலும், குவாரியிலிருந்து கற்களை ஏற்றிச்செல்லும் வாகனங்களை முறையாக மூடி கற்களை எடுத்துச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார். இறுதியாக, உள்ளூர் பஞ்சாயத்திற்க்கு உட்பட்ட இளைஞர்களுக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரியில் வேலைவாய்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

**2. திரு.ஸ்ரீனிவாஸ், வெங்கடேசபுரம்** கிராமம்:

திரு. ஸ்ரீனிவாஸ் அவர்கள், குவாரியின் வாகனங்கள் சாலையில் செல்லும் போது வேகத்தை குறைத்து பொது மக்களுக்கு பாதிப்பின்றி இயக்குமாறு கேட்டுக்கொண்டார். மேலும், குவாரிக்கு செல்லும் சாலையின் இருபுறமும் மரக்கன்றுகளை நட்டு முறையாக பராமரிக்குமாறும் மற்றும் சாலையில் குறிப்பிட்ட கால இடைவெளியில் தண்ணீர் தெளித்து தூசு எழும்பாத வண்ணம் முறையாக பராமரிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

**3. திரு . தர்ஷன், வெங்கடேசபுரம்** கிராமம்:

திரு. தர்ஷன் அவர்கள், குவாரியின் வாகனங்கள் ஊருக்குள் செல்லும் போது வேகத்தை குறைத்து பொது மக்களுக்கு பாதிப்பின்றி இயக்குமாறும் மற்றும் இருசக்கர வாகனங்களில் செல்லும்போது தூசு பாதிப்பு ஏற்படாமல் இருக்க சாலையில் குறிப்பிட்ட கால இடைவெளியில் தண்ணீர் தெளித்து தூசு எழும்பாத வண்ணம் முறையாக பராமரிக்குமாறு கேட்டுக்கொண்டார். மேலும், குவாரியிலிருந்து கற்களை ஏற்றிச்செல்லும் கனரக வாகனங்களை முறையாக மூடி கற்களை எடுத்துச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார்.

**முடிவுரை:**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள திரு. சீ. சின்னண்ணா ரப் ஸ்டோன் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட ஒரு மனுவானது இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், திரு. சீ. சின்னண்ணா ரப் ஸ்டோன் குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஒசூர், அலுவலகத்தில் எவ்வித மனுக்களும் பெறப்படவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 17/10/2024<br>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்<br>ஓசூர்<br>A. 17/10/24 | 17/10/24<br>சார் ஆட்சியர்<br>ஓசூர்<br>5/7 | மாவட்ட ஆட்சியர்<br>கிருஷ்ணகிரி<br>5/7 |